**எஹலியகொட பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எஹலியகொட பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம்எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் எஹலியகொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.
  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் காணி மற்றும் கட்டிடங்கள் மேன்படுத்தல் மேலும் இயந்திர உபகரண கொள்வனவிற்காக செலவிடப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 18,122,387 ஆன செலவை மூலதனமாக்கி இருக்கவில்லை. | குறித்த ஆவணங்களை பரிசோதித்து 2021 கணக்குளில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய அனைத்து மூலதன சொத்துக்களையும் மூலதனமாக்க வேண்டும். |
| (ஆ) | தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் கணக்கு மீதி, செயற்பாட்டு செலவு மற்றும் மூலதன செலவு முறையே ரூபா 60,806 இனால், ரூபா 11,340 இனால் மற்றும் ரூபா 49,466 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. | அனைத்து சீராக்கங்களையும் 2021 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது மேற்கொள்வதாக. | கடன் தவணை மற்றும் வட்டி செலுத்துதல் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய அட்டுறு செலவு ரூபா 115,603 கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன், எதர்வரும் ஆண்டிற்குரிய செலவு ரூபா 111,425 மீளாய்வாண்டிற்குரியதாக அட்டுறு செய்யப்பட்டிருந்தது. | அட்டுறு பணம் தவறுதலாக கடன் கொடுனரிற்காக ஒதுக்க முடியாதிருந்ததுடன் அதனை திரண்ட நிதியத்திற்கு உட்படுத்தி ஏடுகளை சரி செய்துள்ளதாக, எதிர்வரும் ஆண்டிற்குரிய செலவை எட்டுறு செலவாக கணக்கிட்ட தவறை சரி செய்து கணக்கீடு செய்வதாக. | ஆண்டிற்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஒப்பந்த பெறுமதி கூடடுத் தொகை ரூபா 1,308,785 ஆன 04 மாகாண சபை வேலைகளிற்காக கடன்கொடுனர் பெறுமதி கூட்டுத் தொகை ரூபா 9,774,366 அட்டுறுவாக காட்டியதில் நடைமுறை சொத்துக்கள், நடைமுறை பொறுப்புக்கள், மூலதன வருமானம் மற்றும் மூலதன செலவு ரூபா 8,465,581 கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. | அனைத்து தவறுகளையும் 2021 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதாக. | வருமானம், செலவுகள் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியன்று நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக துணை ஏடுகளில் காட்டப்படும் மீதிகளிற்கிடையில் ரூபா 15,144,320 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | வித்தியாசத்தை கண்டறிந்து சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் பெறுமானங்கள் துணை ஏடுகளுடன் இணங்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 1,968,712 ஆன 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படவில்லை. | கொடுப்பனவு வேறொரு வைப்பினூடாக இடம் பெற்றுள்ளதால் இத் தவறு ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்வகாலத்தில் கணக்குகளில் சீராக்கம் மேற்கொண்டு சரி செய்வதாக | சான்றுகளை காட்ட முடியுமாக இருக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 36,237,276 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 15,711,216 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 19,944,474 ஆன நிலுவை வீதவரி மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | நிலுவை வீதவரியை அறவிட வருமான பரிசோதகர்களை அறிவூட்டி வருமானத்தை சேகரிக்க இலக்கொன்றையும் நிலுவை பட்டியலும் வழங்கப்பட்ட போதும் தொற்று நிலைமை காரணமாக வருமானம் சேகரிப்பதில் சிரமங்கள் காணப்பட்டதுடன் சட்ட பிரகாரம் செயற்படவும் முடியாதிருந்ததாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 229,675 ஆன நிலுவை ஏக்கர் மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | குறித்த ஏக்கர் வரி காணிகள் தொடர்பான தகவல்களின் உண்மை தன்மையை பரிசோதித்து அறிவிக்குமாறு 2020 ஒக்டோபர் 16 திகதிய கடிதம் மூலம் கமநல சேவை அலுவலத்திலிருந்து மற்றும் பிரதேச செயலகத்திலிருந்தும் தகவல்களை கோரியுள்ளதாக. | ஏக்கர் வரி ஒப்பாய்வொன்றை மேற்கொண்டு நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அனுமதிப்பத்திர கட்டணம் | | |
| | 1988 இன் 56 இலக்க மற்றும் 2000 இன் 53 இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்கள் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய நிறுவனங்களை இனங்காண மீளாய்வாண்டில் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், ரூபா 1,203,040 ஆன மதிப்பிடப்பட்ட வருமானத்திலிருந்து ரூபா 375,967 தொகையை அறவிட முடியாதிருந்தது. மேலும், வியாபாரங்களினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பாக காலரீதியான கணிப்பீடொன்று இடம்பெறாததால் சபை அதிகார எல்லையில் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக சபையின் பொறுப்பு போதியளவாக மேற்கொண்டிருக்கவில்லை. | பிரதேச சபை அதிகார எல்லை 139 கி.மீ கொண்டுள்ளமை மற்றும் ஒரு உத்தியோகத்தரிற்கு ஒப்படைத்துள்ள ஏனைய கடமைகளுடன் இதற்காக ஈடுபடும் காலம் குறைவடைந்தமை போன்ற மட்டுப்படுத்தப்பட்ட காரணங்களுடன் கணிப்பீட்டிற்காக வேலைத் திட்டமொன்றை தயாரித்த போதும், நிலவும் கொவிட் நிலைமை காரணமாக அந் நடவடிக்கையும் விடுபட்டுள்ளதாக. | நிலவும் சுற்றாடல் சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(இ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 17,021,579 ஆனதுடன் 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் முதல் அரையாண்டிற்காக கிடைக்க வேண்டியதாக இனங்காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 4,604,168 ஆனது. இரத்தினபுரி நீதிமன்றத்தில் 2016 ஆண்டிலிருந்தும் அவிஸ்சாவெல்ல நீதிமன்றத்திலிருந்து 2018 ஜுலை இலிருந்தும் அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தை 2021 மார்ச் வரையிலும் இனங்கண்டிருக்கவில்லை. | தற்போது நிலவும் கொவிட் ஆபத்து காரணமாக 2017 மற்றும் 2018 ஆண்டுகளிற்குரியதாக குறிப்பிடப்படும் நீதிமன்ற தண்டப்பணத்தை அறவிட தேவையான தகவல்களை பெற்றுக் கொள்ள நீதிமன்றங்களிற்கு செல்ல முடியாதுள்ளதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|
| 03 வைப்புக் கணக்குகளில் காணப்படும் கூட்டுத் தொகை ரூபா 8,191,137 ஆன வரவு மீதிகளை இனங்கண்டு தீர்க்க மற்றும் அம்மீதிகளை ஒப்பாய்வு செய்ய தேவையான எழுத்து மூல தகவல்களை கணக்காய்விற்கு சமர்பிக்கவும் சபைக்கு இயலாதிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சான்றுகள் முன்வைக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | எஹலியகொட வாராந்த சந்தைக்காக 2012 ஆண்டில் அறவிட வேண்டிய நிலுவை குத்தகை வாடகை தொடர்பிலான நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் 2016 ஏப்ரல் அளவில் அறவிட்டு முடிக்க வேண்டிய போதும், ரூபா 180,000 மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது. நீதிமன்ற கட்டளை பிரகாரம் செயற்படாமை தொடர்பில் நீதிமன்றத்திற்கு அறிக்கையிட்டு நிலுவையை அறவிட மீளாய்வாண்டு இறுதி வரை சபைக்கு இயலாதிருந்தது. | இப் பணத்தை அறவிட தேவையான சட்ட நடவடிக்கை விரைவில் மேற்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை கால ரீதியாக அறவிட நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 ஜுலை மாதம் குத்தகை வழங்கியிருந்த பலநோக்கு கட்டிடத்தின் கீழ் மாடியில் அமைந்துள்ள 10, அறைகளிற்காக அறவிட வேண்டிய ஒரே தடவையிலான முற்பணத்தை (Key Money) 2018 ஆகஸ்ட் அளவில் அறவிட்டு முடிக்க வேண்டிய போதும், 06 கடையறைகளிற்காக அறவிட வேண்டிய ரூபா 758,822 இனை 2020 திசெம்பர் அளவிலும் அறிவிட்டிருக்கவில்லை. அவ்வாறே ஒரே தடவையிலான முற்பணத்தை செலுத்தி முடிக்கும் வரை அறவிட வேண்டிய மாதாந்த வாடகைக்கு பதிலாக ஒரே தடவையிலான முற்பணம் அறவிட்டதன் பின்னர் அறவிட வேண்டிய மாதாந்த வாடகையை அறவிட்டிருந்ததால் ஒரே தடவையிலான முற்பண செலுத்தாத 06 கடையறைகள் தொடர்பாக சபை நிதியத்திற்கு ரூபா 426,300 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும், உள்ளூராட்சி ஆணையாளரின் 2009 மார்ச் 09 திகதிய 2009/01 இலக்க சுற்றறிக்கையின் 2.5 பந்தி பிரகாரம் மொத்த முற்செலுத்தற் பணம் செலுத்தி முடித்த பின்னர் கடையறையின் உடமையை ஒப்படைக்க வேண்டிய போதும், மேல் கடையறைகளின் உடமையை 2018 ஆகஸ்ட் 08 திகதி ஒப்படைத்திருந்தது. | கீமணி பணத்தை அறவிட குத்தகைதாரர்கள் தொடர்ந்தும் கடிதம் மூலம் அறிவூட்டியுள்ளதாகவும் பணத்தை தவணை அடிப்படையில் செலுத்த சந்தர்பம் வழங்கிய காரணத்தால் முற்பணம் அறவிட்ட பின்னர் மாதாந்த வாடகை அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதாக. | அறவிட வேண்டிய வருமானத்தை காலரீதியாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| எஹலியகொட நகரில் அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்ததுவதன் கீழ் நகரில் பாதை ஓரமாக அமைந்துள்ள கட்டிட பகுதிளை அகற்றுகையில், அதன் எஞ்சிய பகுதிளை தேவையான இடங்களிற்கு கொண்டு செல்லும் போக்குவரத்து செலவை பிரதேச சபையினால் மேற்கொள்ள மற்றும் பின்னர் அச்செலவை நகர அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக மீள் நிரப்ப உடன்பட்ட வாய்மூல ஒருமைப்பாடின் பிரகாரம் 2013 ஆண்டில் முற்பணமாக ரூபா 900,000 சபை நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டு இறுதி வரை அப் பணத்தை மீள்நிரப்ப இயலாதிருந்தது. மேலும் ஒப்பந்தக் காரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 4,390,000 ஆன எஞ்சிய தொகை தொடர்பில் எடுத்திருந்த கடப்பாடுகளை தீர்க்க முடியாததன் காரணமாக நிலுவைக்கு மேலதிகமாக ஏற்பட்டிருந்த நட்டமாக ரூபா 2,634,000 ஆன இழப்பீட்டு தொகையை கோரி ஒப்பந்தக்காரர் நீதிமன்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். 2019 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 17,000 செலவிடப்பட்டிருந்தது. | எஹலியகொட நகர அபிவிருத்தி கருத்திட்டம் மிக விரைபில் மேற்கொள்ள வேண்டிய கருத்திட்டமொன்றாகையால் உடன்படிக்கை கைச்சாத்திடாது முன்னால் தவிசாளர் சபையை அறிவூட்டி, பட்டியல் கிடைத்த பின்னர் உடன்படிக்கை கைச்சாத்திட்டதாகவும் இது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கொன்று இருப்பதாக. | கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் உடன்படிக்கை கைச்சாத்திட்டு முறையாக மேற்கொள்ள வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் ரூபா 39,281,227 செலவில் 2012 வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட கெடஹெத்த பலநோக்கு கட்டிடம் 2018 ஆண்டு வரை விளைவற்று காணப்பட்டதுடன், 2018 திசெம்பர் 31 திகதி ரூபா 100,000 ஒரு வருடகால மாதாந்த வாடகைக்கு கட்டிடத்தின் முதலாம் மாடி மற்றும் கீழ் மாடி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் குத்தகைகாரரினால் கட்டிடத்தின் பல குறைபாடுகளை | வாடகையை செலுத்துமாறு அடிக்கடி குத்தகைகாரருக்கு எழுத்து மூலம் அறிவித்ததாகவும் குத்தகைகாரருக்கு சொந்தமான உபகரணங்கள் உள்ளடங்களாக தற்போது கட்டிடத்தை சபைக்கு சுவீகரித்துள்ளதாகவும் குத்தகைகாரரினால் புரக்கணித்த பணத்தை அறவிட கட்டிடத்தினுள் | சபைக்கு சொந்மான சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டியதுடன் நிலுவை வாடகையை அறவிட வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறிப்பிட்டு அதனை திருத்தி தருமாறு கோரி வாடகை செலுத்துவதை புரக்கணித்திருந்ததுடன், சபை நிதியத்திலிருந்து ரூபா 2,331,013 செலவில் அனைத்து திருத்த வேலைகளையும் பூர்த்தி செய்து வழங்கியிருக்கையில் நோக்கத்திலான வேலைகளிற்கு கட்டிடத்தை பயன்படுத்த மற்றும் உடன்படிக்கை பிரகாரம் வாடகை செலுத்த நடடிக்கை எடுத்திருக்கவில்லை. குத்தகைகாரர் வேலைகளை ஆரம்பித்த திகதி முதல் வாடகை அறவிட 2019 ஒக்டோபர் 08 திகதி இடம்பெற்ற பொது சபையில் அவசர முன்மொழிவின் கீழ் அங்கீகரித்ததன் காரணமாக 2020 திசெம்பர் வரை சபைக்கு வாடகை வருமனம் அறவிட இயலாதிருந்ததுடன், இழக்கப்பட்ட வருமானம் ரூபா 2,400,000 ஆனது. | உள்ள சுகாதார உபகரணங்கள் தொடர்பாக மதிப்பீடொன்றை பெற பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து ஆளணி குழுவொன்றை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளதாகவும் இது தொடர்பில் குத்தகைகாரரும் அறிவூட்டப்பட்டுள்ளதாகவும் தற்போது இக்கட்டிடத்ததை மீண்டும் டென்டர் வழங்க தேவையான மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுத் தருமாறு மதிப்பீட்டு திணைக்களத்திடம் கோரியுள்ளதாக. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் மீளாய்வாண்டில் 1500 மெட்டிக் டொன் அளவான திண்ம கழிவுப் பொற்களை வெளியிட ரூபா 16,041,867 ஆன கிரயம் மற்றும் 21 ஆளணி ஊழியர்களும் 04 வாகனங்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அக் கழிவுகளை வெளியிடல் ஒழுங்கான மற்றும் சுற்றாடல் நேய முறையிற்கு மாற்றமாக நிலத்தில் குழிகள் வெட்டி அதனுள் கழிவுகளையிட்டு குழிகள் மூடப்பட்டிருந்தன. | நாட்டில் காணப்பட்ட சேதனை பசளை பயன்பாடு தொடர்பான கருத்தாடலின் மீது கழிவு சேர்க்கப்படுவதுடன், அக் கழிவுகளிலிருந்து பசளை உற்பத்தியை மேன்படுத்த திண்ம கழிவு திட்டமொன்றை எதிர்காலத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக. | தேசிய கொள்கைகளிற்கு இணங்க கழிவு முகாமைத்துவ திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |